Koviloor Digital Library

453
3

உ

ஓம் தத் சத்.

திருச்சிற்றம்பலம்.

கர்மோபாசன ஞானத்[illegible]தி.

ACC.No: 27297



தணிகை நிர்மலானந்தம் க. வேதாசல
சுவாமிகளவர்களால் தொகுக்கப்பட்டது.

ஓம் சாந்தி.

1930.

நேஷனல் பிரஸ், பெங்களூர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

A. No. 27297



தணிகை
சுவாமி நிர்மலானந்தம் சு. வேதாசலம்.

The Nelson Press, Bangalore.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

ஓம் தத் சத்.

கர்மோபாசன ஞானத்தொகுதி.

சென்னை, அயன்புரம், ஆரூதார விலாச
முதலிய நூலாசிரியர், வித்வான்
கன்னிபுத்தூர்
வேலாயுத முதலியார் குமாரரும்
மார்க்கண்டேயவர்க்கம்
ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகள் மாணவரும்
சென்னை சமரச நிலய சன்மார்க்க
சபைத் தலைவருமாகிய
தணிகை நிர்மலானந்தம்
க. வேதாசல சுவாமிகளவர்களால்
தொகுக்கப்பட்டு,

சுவாமிகள் பிரசங்கத்தின்போது
ஸ்ரீமத் சிதானந்த பரமஹம்ஸ சுவாமிகளது
பெங்களூர் அபிநவ ஆனந்தாசிரமத்தாரால்
பெங்களூர்
ஸ்ரீமதி அன்னவசந்தி சங்கத்தில்
விநியோகிக்கப்பட்டது.

ஓம் சாந்தி.

1930.

Koviloor Digital Library

தன்தெய்வத் துதி.

திமிரமலமறுத் தத்திகழறிவெனுந்தலத்தே
அமரவருளியதணிகை யண்ணலெனுளத்தே

அடியார் துதி.

சத்தியஞான உத்தமசிவன்
முத்தர்கள்பாதம் பத்திகொண்டுய்வாம்.


அவையடக்கம்.

நான்மறையகத்து நவில்முக்காண்ட
நூன்முறையறியா நுண்ணறிவில்லேன்
கற்றோர்முன்னங் கழறியதோரிற்
பொற்றாமரைமலர்ப் புடையலர்கொட்டியே.

பாயிரம் சம்பூர்ணம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.



Koviloor Digital Library

கர்மத் தொகுதி.

சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தபிராப்தி யென்னும் மோக்ஷத்தை அடைய விருப்ப முற்ற ஒவ்வொருவரும் அம்மோக்ஷத்திற் குச் சாதனமாக ஓர் சத் கர்மத்தை அநுஷ் டித்தல் வேண்டுமென்பது உடன் பாடே யாகும்.

ஆதிகாலத்தில் பரமேச்சுரன் தமது அருமைத் திருவாக்கால் திருவாய் மலர்ந்தரு ளிய அரிய ‡ நான்கு வேதங்களினுற் சொல் லப்பட்ட கர்மம், உபாசனை, ஞானம் என்னும் மூன்றனுள் அக்கர்மம், நித்தியம், நைமித்தி யம், காமியம், நிஷித்தம், பிராயச் சித்தம் என ஐந்து வகைப்படும்.

---

‡ நான்கு வேதங்களாவன?

இருக்கு வேதம்—இதன் வாக்கியம் பிரக்ஞா னம் பிரம்மம்.

யசுர் வேதம்—இதன் வாக்கியம் அகம் பிரம்மாஸ்மி.

சாம வேதம்—இதன் வாக்கியம் தத்துவமசி.

அதர்வண வேதம்-இதன் வாக்கியம் அயமான் மாப்பிரம்மம்.

Koviloor Digital Library

அவையாவன? தத்தம் வருணாச்சிரம தர்ம கர்மத்திற்கேற்ப நிதம் நிதம் பிராதக் காலயிலெழுந்திருந்து ஸ்நான சந்தியா வந்தன செபதப அனுஷ்டானபான முதலிய செய்தல் நித்திய கர்மமென்றும், சதுர்த்தி, சஷ்டி, சாந்திராயண விரதம், கிருத்திகை, ஏகாதசி, துவாதசி முதலிய நிமித்தியத்தைக் கோரிச் செய்தல் நைமித்திய கர்மமென்றும், இகபரலோக போக போக்கியத்தைக் கோரி ஓமம் எக்ஞம் யாகம் முதலியவை சளைச் செய்தல் காமிய கர்மமென்றும், விதி விலக்கிற் கப்பாற்பட்டதெனப் பின் நிஷேதிக்கப்பட்ட கர்மத்தைச் செய்தல் நிஷித்த கர்மமென்றும், கொலைகளவு, 'கள், காமம், குருநிந்தை முதலியவற்றால் உண்டாகும் பழிபாவ தோஷங்கள் பரிகாரமாம் பொருட் டுச் செய்யுங் கர்மம் பிராயச்சித்த கர்மம் என்றும் சொல்லப்படும்.

ஆதலால், காமிய நிஷித்த பிராயச்சித்த கர்மங்களை விட்டு நித்திய நைமித்திய சத் கர்மங்களைப் பிரதிபலன் கோராது செய்தல் வேண்டும் அதனால் ஆகத்தை விடாது பற்றி

Koviloor Digital Library

நின்று விதவிதமான நோய்களை அதிகரிக்கச் செய்து வருத்தும் வாத பித்த சிலேத்தும தோஷம்போல அந்தக் கரணத்தை விடாது பற்றிநின்று சென்ம தேசத்தில் † நால்வகை யோனியினிடத்தும் செலுத்தும். மலம், விக்ஷேபம், ஆவரணம் என்னும் மூன்றனுள் ஒன்றாகிய *மலமென்னும்பாவம் ஒழியுமென் பதுண்மையேயாம்.

---

† நால்வகை யோனியாவன ?

அண்டசம்— முட்டையிற் பிறப்பது.

சுவேதசம்—வியர்வையிற் பிறப்பது.

உத்பீசம்— நிலத்திற் பிறப்பது.

சராயுசம்— கருப்பையிற் பிறப்பது.

*மலமாவன ?

ஆணவம்—உடலை நானென் றிருமாந்திருத்தல்.

காமியம்—கண்ட பொருட்கெல்லாம் ஆசைப் படுதல்.

மாயை—தனக்கு வருவதை மேல் அறியாது கோபித்து நிற்றல்.

Koviloor Digital Library

அன்றியும், தான் செய்யுங்கர்மங்களனைத்தையும் நிஷ்காமமாகச் செய்வதாலும், ஆருயிர்கள்மேல் வைக்கும் அரிய கருணையாலும் பரம உபசாந்தத்தாலும், சமரச பாவத்தாலும் அப்பாவம் போமென்பதும் அறிதற்பாலதாம்.

(கருத்து) ஒவ்வொருவரும் தங்கட் தங்கட்குரிய நித்திய நைமித்திய கர்மங்களை யானெனதென்பதறப் பலாபேக்ஷையின்றி நிஷ்காமமாகச் செய்வதனுல் ஆணவாதி மல பாவத்தினின்றும் நீங்குவர் என்பதாம். முமுக்ஷுவேனும் உலோகோபகாரத்தின் நிமித்தம் செய்தல் கடனும்.

கர்மத் தொகுதி சம்பூர்ணம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.



Koviloor Digital Library

*உபாசனைத் தொகுதி.

முன் நித்திய நைமித்திய சத் கர்மங்களைச் செய்து அந்தக் காணத்திலுற்ற நானென்னும் ஆணவாதி மலங்களை நிவிர்த்தி செய்தது போலவே மீண்டும் அவ்வந்தக் காணத்திலுற்ற விக்ஷேப தோஷத்தையும் நிஷ்காமபத்திகளைச் செய்து நிவிர்த்தித்தல் வேண்டும் என்பதாம்.

விக்ஷேபமாவது சித்தத்தினுடைய சஞ்சலத்தன்மை; அஃதாவது சத்கருமபுண்ணிய பூசைகளிலாவது சற்குரு தொண்டிலாவது சிரவண மனன நிதித்தியாசனங்களிலாவது தன துண்மை வடிவாகிய சச்சிதானந்த சொரூபத்திலாவது நிற்கும் ஸ்திர புத்தியின்றி அன்னிய விஷயத்தில் சென்றலைந்து பிரமிக்கின்றதெதுவோ அதுவேயாம்.

இந்தச் சஞ்சலவிர்த்தி நிவிர்த்தியாகும் பொருட்டு, பரப்பிரம்ம சொரூபங்களாகிய விஷ்ணு, சிவம், கணேசன், சத்தி, சூரியன் முதலாகிய கடவுளரிடத்துச் சத்திய புத்தி

---

* பத்தித் தொகுதி.

Koviloor Digital Library

வைத்து அதி பிரேமையாய்க் காரணகாரிய பிரம்மத் தன்மையுணர்ந்து தன் தெய்வத்தைப்பிறதெய்வ தூஷணையின்றி வழிபட்டுப் பூசித்தல் வேண்டும்.

விஷ்ணு உபாசித்தற்குக் காரண பிரம்மமாகும் போது மற்றகடவுளராகிய சிவம், கணேசன், சத்தி, சூரியன்நான்கும் காரிய பிரம்மங்களாகவும் இப்படியே ஒவ்வொன்று காரண பிரம்மங்களாகும்போது மற்ற நான்கையும் காரிய பிரம்மங்களாகவும் உணர்ந்து, எவ்வாதனத் தேனும் அமர்ந்து, மனதை இந்திரிய விஷய சகிதமாய் விடாது, தத்தம் காரணக்கடவுள் சகிதமாய் செலுத்தி நிஷ்காம பத்திசெய்வதாலும் அல்லது பகவந்நாமோச்சாரணம் பஞ்சாக்ஷர மந்திரோச்சாரணம் அஜபாமந்திரோச்சாரணம்சகுண நிர்க்குணப் பிரம்ம சிந்தனை ஸ்ரீ சற்குருசேவை திருத்தொண்டு சிவஞான விருப்பு வேதாந்தசிரவணம் செய்யப் பிரவர்த்தித்தல் முதலிய சத்பத்திகளாலும் விக்ஷேபமென்கின்ற விர்த்தி நிவிர்த்தியுண்டாய்விடும்.

Koviloor Digital Library

(கருத்து) உத்தம தெய்வங்களினிடத் துச்சத்திய புத்திவைத்து பூசாசேகர நிரவி யங்களையெல்லாம் ஈசுரார்ப்பணமாகச் செய்து, சித்தமசையாதபடி நின்று நிஷ்காம பத்திபுரிவதால் மனதின்கண் உற்ற ஆணவா திமல தோஷத்தோடு விக்ஷேப தோஷமும் ஒழிந்துபோம் என்பதாம்.

உபாசனைத் தொகுதி சம்பூர்ணம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.



Koviloor Digital Library

ஞானத் தோகுதி.

முன் நிஷ்காம கர்மங்களைச் செய்து அந்தக் கரணத்திலுற்ற ஆணவாதி மலதோஷத்தையும் நிஷ்காம பத்தி செய்து விக்ஷேப தோஷத்தையும் நிவிர்த்தி செய்தது போல மீண்டும் அவ்வந்தக் கரணத்திலுற்ற அஞ்ஞானமென்னும் ஆவரண தோஷத்தையும் நிவிர்த்திக்க வேண்டுவதவசியமாம்.

ஆவரணமாவது உலகைச் சதமென்றும், உடலை நானென்றும், உறு பொருளை எனதென்றும், சிவமும் சீவனும் வேறென்றும் நான் சிவமல்ல ஜீவனென்றும் பிராந்தி கொண்டு, பிரம்மம் இல்லை, இருந்தால் காணுதா என்று தனது நிசவடிவமாகிய பிரம்ம (ஆத்ம) சொருபத்தை மறந்தமையேயாம் அஃதாவது அஞ்ஞானத்தால் தான் மூடப்பட்டு நிற்றலாம்.

ஆகலால், இவ்வாவரணம் நிவிர்த்தியாமாறு ஸ்ரீசற்குரு மூர்த்தியாகிய காரண தேசிகனருளாற் பெறும் மகா வாக்கியோபதேச

Koviloor Digital Library

ஆத்மஞான விசாரஞ்செய்தல் வேண்டும் அத ஞலன்றி ஏனைய சாதனங்களால் நிவர்த்திப் பது முடியாது.

அதனுல், § ஈஷணத்திரயங்களில் பற் றின்றி ஊனக்கண்ணுல் உணரவொண் ணுத பாப்பிரம்மானுபவத்தை ஞானக்கண் ணுல் உணர்த்தவல்ல தேசிகனெங்குளனே வெனத் தேடிக்கண்டு, உடற்குயிர் போலும் கட்கிமைப் போலும் ஊசிநூற்போ லும் அவனுடன் பழகி, அவன் குறிப்பிற் சார்ந்து அவனுல் *ஞான தீக்ஷையை யடை

§ ஈஷணத்திரயமாவன ?

பொன்—பொன்னுசை.
பெண்—பெண்ணுசை.
மண் —மண்ணுசை.

* ஞானதீக்ஷயாவன ?

மானசதீக்ஷை-ஆமையைப்போல்சிந்தித்தல், அதனுல் சஞ்சிதம் போம்.
சட்சுதீக்ஷை —மீனைப்போல் நோக்குதல், அதனுல் ஆகாமியம் போம்.
பரிசதீக்ஷை —பறவையைப்போல் பரிசித் தல், அதனுல் பிராரத்தம் போம்.

Koviloor Digital Library

ந்து *ஆப்தமாதி சிசுருஷை புரிந்து, †உட லாதி தத்தம் செய்து, மகா வாக்கியோப தேசத்தைப் பெற்று, ‡அந்தரங்க சாதனங்க

---

*ஆப்தமாதி சிசுருஷையாவன?

ஆப்தம்— குருபரனுக்குப் பிரியமாய் நடத் தல்.

அங்கம்—குருபரனுக்குப் பணிவிடைபுரிதல்.

தானம்—குருபரனுக்கு வீடுமனை நிலம் முத லிய விருக்கின் அவற்றைக் காப்பாற்று தல்.

சற்பாவம்—குருபரனுருவைச் சச்சிதானந்த சிவமே யெனப்பாவனை செய்தல்.

†உடலாதிதத்தமாவன?

உடல் —தேகாபிமானம் விடல்.

பொருள்—திரவியாபிமானம் விடல்.

ஆவி—நான் ஜீவனென்னு மபிமானம் விட்டுச் சிவமெனல்.

‡ அந்தரங்க சாதனமாவன?

விவேகம்-பிரம்மம் நாசமின்றியதும் கிரியை யின்றியதுமாம்; பிரபஞ்சம் நாசமுடைய தும் கிரியையுடையதுமாமெனப் பகுத் தறிதல்.

Koviloor Digital Library

ளெட்டையும், சந்தேகமற வினவி, அச்சா தனமுமிறந்து; சாத்தியமான இடத்தில்நேதி செய்து, சேஷித்து நின்ற தன்னைப் பிரம்ம

வைராக்கியம்—இகலோக பரலோக போகங்களைத் துச்சமாமென வறிந்து அவற்றை விரும்பாது விடுத்தல்.

சமாதிசட்கசம்பத்தி—1 சமம்—மனதடக்குதல். 2 தமம்—இந்திரிய நிக்ரஹம் செய்தல். 3 உபரதி (விடல்)—விட்ட பொருள்மீது பற்றுவையாதிருத்தல். 4 திதிக்ஷை (சகித்தல்)—சீதோஷ்ணம் பசிதாகம் முதலியவற்றைச் சகித்தல். 5 சமாதானம்—குரு உபதேச வாக்கியார்த்தங்களை மனதிற் பொருந்தத் தரித்தல். 6 சிரத்தை—சற் குருவினிடத்தும் அவன் கொடுத்த நூலினிடத்தும் விசுவாசம் வைத்தல்.

முமுக்ஷுத்வம்—சர்வதுக்க நிவிர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் அடைய இச்சித்தல்.

சிரவணம்—சற்குருவினிடத்து மகா வாக்கியார்த்தத்தின் பொருளைக் கேட்டல்.

மனனம்—அத்துவித பரப்பிரம்ம சொரூபத்தைச் சிந்தித்தறிதல்.

Koviloor Digital Library

(ஆத்ம) சொரூபமாக வறிந்து அச்சொரூபத்தையே இடைவிடாது மனனஞ்செய்து சுருதி குருவாலடைந்த நிஜானுபவமாகிய சுவானுபவத்தால் * திரிகரண சுத்தியாற் செய்யுங் கர்மங்களனைத்திற்கும் நான் சர்வ சாக்ஷியாயிருக்கிறேனென்பது அறிந்து, அன்னியமாகத் தோன்றிய தேகாதிப் பிரபஞ்சங்களைத் தன்னைவிட வேறில்லையென்றும் அப்படி திருசியமாகத் தோன்றுவனவெல்லாம் பொய்யென்றும் அறிந்த சித்த

நிதித்தியாசனம்—பிரம்மாகார (அகண்டாகார) விர்த்தியாய் நிரந்தர சிந்தை பெற்றிருப்பதாகிய தெளிதல்.

பதார்த்த சோதனை—தத்துவமசி மகா வாக்கியத்தில் தத்பத வாச்சியார்த்த இலட்சியார்த்தங்களையும் துவம்பத வாச்சியார்த்த இலட்சியார்த்தங்களையும் பரிசோதித்தல்.

* திரிகரண சுத்தியாவன?

மனம்— மனச்சுத்தம், வஞ்சகமின்மை.
வாக்கு— வாக்குச்சுத்தம், பொய்யின்மை.
காயம்— காயச்சுத்தம், கொலைகளவின்மை.

Koviloor Digital Library

விர்த்தியையுமறவேயொழித்து, சித் ஆத்மா வேநான் என்று தன்னைச் சின்மாத்திரத்தில் அயிக்கியஞ் செய்து, அவ்வயிக்கிய மென்கின்ற கிஞ்சித் இருப்பாகிய அறிவுந்தானே யென்று கேவல ரூபமாய்த் தான் மாத்திரமாய்ச் சடேதாதயமாய் விளங்குவதே ஞானத்தின் பயனும்.

(கருத்து)—அருளாசிரியனிடத்து ஆத்தும விசாரஞ்செய்து, அகங்கிருதி, நிரகங்கிருதியென்பன தோன்ருவாறுவெறுங்கடம்போல அறிவுமாத்திரமாயுள்ள தான் அகத்தும் புறத்தும் யாதொன்று மின்றித் தானே தானய் நிற்றலாம். இந்நிலையில் நிற்பார்க்கு மலதோஷ விக்ஷேப தோஷங்களுடன் ஆவரண தோஷமும் நிவிர்த்தியாய்விடும் * இருவினையொப்பாதி வந்தவர் சற்குரு கருணை

---

* இருவினையோப்பாதியாவன?

இருவினை யொப்பு — நல்வினை தீவினைகளின்பயன் சமத்துவமாதல்.

மலபரி பாகம்—மலமென்னும் அஞ்ஞானம் கெடுதல்.

சத்திநிபாதம்—ஐயனருட் பெருங்கருணை பதிதல்.

Koviloor Digital Library

யால் சனன மரணந்தவிர்ந்து பரமமுத்தர் களாய் அதாவது சர்வதுக்க நிவிர்த்தியும் பரமானந்த பிராப்தியு மாகிய சச்சிதானந்த வாழ்வைப் பெறுவர் என்பதாம்.

ஞானத்தொகுதி சம்பூர்ணம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.

வாழி.

வாழி கன்மசத் பத்தியும் வாழிய
வாழி ஞானநற் சாதனம் வாழிய
வாழி நீறுமைந் தக்கரம் வாழிய
வாழி சற்குரு வாழிய வாழிய.



Koviloor Digital Library

உ

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

நிர்வாண தசகம்.

சந்த விருத்தம்.

ஓதுமண்ணிலை யுதகமிங்கிலை
யொளிருந்தேசிலை காலிலை
பூதவிண்ணிலை யிந்தியமிலை
புகன்றவைகளின் றிரளிலை
யேதுமே விபசாரமேவி
யிறப்பதாலிச் சுழுத்தியில்
மீதியாயுள பூரணானந்த
மேனியான சிவோகமே. (1)

சாதியுமிலை யாச்சிரமமிலை
சாதியாச்சிரம தருமமா
நீதியுமிலை தாரணையிலை
நிதித்தியாசன யோகமே

Koviloor Digital Library

யாதியுமில்லை கற்பனையப
வாதவாசிரய மாதலாற்
சோதியாய்நிலை நின்றபூரண
சுத்தரூப சிவோகமே. (2)

தந்தைதாயில்லை தேவருமில்லை
தங்கு லோகங்களுமில்லை
சந்தவேதங்களில்லை யாகங்கள்
சகல தீர்த்தங்களுமில்லை
தொந்தமற்ற சுழுத்தியிற்றெரு ட
ராதுநீங்குதலான் மகா
னந்தபூரண சத்திய கேவல
ஞானநித்த சிவோகமே. (3)

பன்னுசாங்கிய சைவமுமில்லை
பாஞ்சராத்திரமுமில்லை
யுன்னுசைனமீ மாஞ்சையுமில்லை
யுலகுண்மற்ற மதமில்லை
துன்னுஞானிகளநுபவப்பிர
சித்தமாய சொரூபமாய்
பின்னமேயற நின்றபூரண
பிரம்மமென்ற சிவோகமே. (4)

Koviloor Digital Library

பகருமேலிலை கீழிலைப்பா
வுள்ளிலைப்புரமுமிலை
யகலமோடு வில்குறுக்கிலை
யாகிழக்கிலை மேற்கிலை
ககனமென்ன நிறைந்தகண்டசிற்
கனகேவல ரூபமாய்ச்
சுககனச்சுக தாதிபேத
விகீனசுத்த சிவோகமே. (5)

வெள்ளையுமிலை கருமையுமிலை
வேறுபீத சிவப்பிலை
குள்ளமுமிலை நெடியதுமிலை
குறைபெருத்தலு மில்லையே
தள்ளியித்தனை ரூபமுந்தவி
ராதசோதி சொரூபமா
யுள்ளபூரண ஞானவின்ப
வுபாதிகீன சிவோகமே. (6)

சாத்திரந்தனை போதிப்பானிலை
சாத்திரம் படிப்பானிலை
சாத்திரமிலை பாடமுமிலை
சாற்று நீயிலைநானிலை

Koviloor Digital Library

சாத்தியாதி சகத்திலேச்சல
மற்றுமிஞ்சுதலான் மகா
சாத்திரப் பொருளானபூரண
சாந்தபோத சிவோகமே. (7)

சாக்கிரமிலை சொற்பனமிலை
சார்சுழுத்தி யிலையிதிற்
ருக்குவிஸ்வனிற்றை சதனிலை
தங்கு பிராஞ்ஞனுமில்லை மூன்
ருக்கையுமிலை யவையவித்தை
விகாரமாதலி னலிவை
நீக்கிநின்றிடு துரியபூரண
நித்தபோத சிவோகமே. (8)

அதிவியாபக மாதலாலழி
வற்றதத்துவ மென்றதாற்
சுதசித்தப் பொருளானதாற்றனில்
வேறொன்றைத் தொடாததாற்
சததமாயுள சிவமொழிந்திவண்
சகமெனும் பொருளேயிலை
யதுவிதென்றுரை செய்வதற்கரி
தாமகண்ட சிவோகமே. (9)

Koviloor Digital Library

இல்லையேக மெனுஞ்சொலுமிரண்
டென்றுசொல்லுவ தெங்ஙனே
யில்லைகேவல மோடகேவல
மில்லைசூனியா சூனிய
மெல்லையற்றவ கண்டசிற்சுக
வேகபூரண வத்துவாற்
றெல்லைவேத முடிப்பொருடனைத்
தோன்றவெப்படி யோதுவாம். (10)

நிர்வாண தசகம் சம்பூர்ணம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.

இஃது திருவிடைமருதூர் பிட்சு சாஸ்திரிக
ளென்னும் ஸ்ரீ உலகநாத சுவாமிகளால்
தமிழில் மொழி பெயர்த்தருளியது.



Koviloor Digital Library

மகாவாக்கியம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சற்குருவி னருளாலுந் தவமுடிவின்
  பயனாலுஞ் சனனம் நீங்கி
சிற்கனவாழ் வடைவதற்கே சிந்தைசெயுந்
  திறமுடையச் சீல ராகி
நிற்குநிலை சாதனங்க ளொருநான்கு
  மறைநான்கு நீந்தி யோக
வற்கமொடு சகலகலை களுங்கற்று
  ஞானநெறி வருவா ராமால்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் சாந்தி.